**சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்**

முன்னிலை **திரு.S.பாஸ்கரன், M.A., LLM.,**

சார்பு நீதிபதி, ஆரணி,

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 03ஆம் நாள் செவ்வாய்கிழமை

**IA.No.04/2025 in OS.No.111/2019**

**TNTM 03000311/2019**

S.புருஷோத்தமன் ... மனுதாரர்/வாதி

/எதிராக/

1. T.P.சண்முக முதலியார் (இறந்தவர்)
2. J.ராமு ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக 13.02.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சரவணன்,B.Com.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.P.ஜெகதீசன்,B.Sc.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்டார். இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சான்றாவணங்களை பரிசீலித்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை மனுதாரர்/வாதி தரப்பு சான்றாவணங்களாக ஏற்க அனுமதிவேண்டி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 7 விதி 14(3)ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்:–**

இம்மனுவில் மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். மனுதாரர் அசல் வழக்கை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு சொத்து மனுதாரருக்கு உரிமையானது என விளம்புகை செய்யக்கோரியும், வழக்கு சொத்தின் மீது 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி ஆவணங்கள் ஏதும் பதிவு செய்யக்கூடாது என ஒரு நிரந்தரதடை உத்தரவு கோரியும், 10.01.2007 அன்று 1ம் எதிர்மனுதாரர், 2ம் எதிர்மனுதாரர் பெயருக்கு ஏற்படுத்திக்கொடுத்துள்ள கிரைய ஆவணம் செல்லத்தக்கத்தல்ல என விளம்புகை செய்யக்கோரியும் மற்றும் செலவுத்தொகை கோரியும் தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் வழக்குடன் தாக்கல் செய்துள்ள வழக்குரையையும் வரைபடத்தையும் இதன் ஒரு அங்கமாக பாவிக்க

கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேற்படி மனுதாரர் சகோதரர் விஜயகுமார் என்பவர் 07.01.2004 அன்று காலமாகி விட்டார். மேற்படி வழக்கு தாக்கல் செய்யும் போது மனுதாரரின் சகோதரரின் இறப்புச்சான்றிதழ் ஜெராக்ஸ் இருந்ததால் அவற்றை வழக்குரையுடன் தாக்கல் செய்து இருந்தார். தற்போது அதற்கான இறப்புச்சான்றிதழ் சான்றிட்ட நகலை பெற்று அவற்றை தாக்கல் செய்கிறார்.

2. மனுதாரருக்கு சொந்தமான குடியிருக்கும் வீட்டின் உடைய தென்புற இடத்தை புறவழிச்சாலை அமைப்பதற்காக சாலை அகலப்படுத்துபோது அரசினால் கையகப்படுத்தப்பட்டது. அதற்காக மனுதாரர் 15.03.2006 அன்று பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரம் எழுதி கொடுத்துள்ளார். மேற்படி விவரங்களை மனுதாரர் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளார். ஆவணத்தின் சான்றிட்ட நகலை வழக்கு தாக்கல் செய்த பிறகு சார்பதிவாளர் அலுவலகத்தில் மனு செய்து பெற்றுள்ளார். மேற்படி மனுதாரரின் தந்தையான 1ம் பிரதிவாதி/1ம் எதிர்மனுதாரர், 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதிக்கு வழக்கு சொத்து குறித்து 10.01.2007 அன்று எழுதிக்கொடுத்துள்ள கிரைய பத்திரத்தில் குடும்ப கடன்களை பைசல் செய்வதற்காகவும், மனுதாரருடைய ஜீவனத்திற்காகவும் வைத்தியச் செலவுக்காகவும் கிரையம் கொடுப்பதாக கூறிவிட்டு, அதன்பிறகு 15.02.2010 அன்று மனுதாரரின் தந்தை மற்றும் தாயார் இருவரும் சேர்ந்து மோகன்தாஸ் என்பவரிடமிருந்து ஒரு மனையை கிரையம் பெற்றுள்ளார். 2007ம் ஆண்டு இடத்தை விற்பனை செய்துவிட்டு, உடனடியாக 2010ம் ஆண்டு மனையை கிரையம் பெற்றுள்ளார். 17.04.2014 அன்று மனுதாரரின் தந்தையின் சகோதரர் T.P.அருணகிரி முதலியார் என்பவரும் அவருடைய வாரிசுகளும் அவர்களுக்கு பிதுரார்ஜ்ஜிதமாகப் பாத்தியப்பட்டு, அருணகிரிக்கு பாகப்பிரிவினை முன்னிலைக்கு கிடைக்கப்பெற்ற சொத்தை பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள். அவற்றில் மனுதாரரின் தந்தையான T.P.சண்முகம் என்பவர் சாட்சி கையெழுத்தும் செய்துள்ளார்.

3. 06.03.2024 கணிணி வாயிலாக செலுத்திய மனுதாரருடைய வீட்டின் வீட்டு வரி ரசீது மற்றும் மனுதாரர் திருமணத்திற்கு பிறகு சிலகாலம் கும்பகோணம், துகிலி கிராமத்தில் வசித்துவந்தபோது மனுதாரர் தந்தை அவரது மகன் என்ற முறையில் மனுதாரருக்கு அனுப்பிய கடிதங்கள் (6) இத்துடன் தாக்கல் செய்கிறார். மேற்படி கடிதங்கள் மனுதாரர் வீட்டை சுத்தம்செய்யும்போது தற்போது மனுதாரருக்கு கிடைத்து அவற்றை தாக்கல் செய்கிறார். ஆதலால். அவற்றை முன்பே தாக்கல் செய்ய இயலவில்லை. மனுதாரர் மேற்கூறிய ஆவணங்களானது மேற்படி மனுதாரர் வழக்கின் உண்மைதன்மைக்கு மிகவும் முக்கியமானதாகும். ஆதலால், மேற்படி மனுவை அனுமதித்து மேற்படி ஆவணங்களை மனுதாரர் தரப்பில் குறியீடு செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகிறது. இல்லாவிட்டால் மனுதாரருக்கு பெருத்த இழப்பு ஏற்பட்டுவிடும். எனவே, அசல் வழக்கில் இன்று

இத்துடன் தாக்கலாகும் ஆவணங்களை மனுதாரர் தரப்பில் சான்றுகளாகப் பெற்றுக்கொள்ள உத்திரவு செய்வது மிகவும் அவசியமாகவும், நியாயமாயும் உள்ளது. இல்லையேல் மனுதாரருக்கு பெருத்த கஷ்ட, நஷ்டங்கள் ஏற்பட்டுவிடும் என்று இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**<u>4. 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரை சுருக்கம்:-</u>**

2ம் எதிர்மனுதாரர் எதிருரையில் ஒப்புக்கொண்டது தவிர்த்து இதர சங்கதிகளை மனுதாரரே கண்டிப்பாக நிரூபிக்க வேண்டியது. மனுதாரரின் மனு சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. தள்ளுபடி செய்யப்பட வேண்டியது ஒன்றாகும். இவ்வழக்கானது 2019ல் தாக்கல் செய்யப்பட்டு பலமுறை விசாரணை வரும் சமயம் எல்லாம் ஏதாவது மனுவை தாக்கல் செய்வதை மனுதாரர் வாடிக்கையாக வைத்துள்ளார். அதே நிலையில்தான் இந்த மனுவும் தாக்கல் செய்யபட்டுள்ளது. ஏற்கனவே ஒரு சம்பந்தமில்லாத கமிஷனர் மனுவை தாக்கல் செய்து, அம்மலுவும் சமூகம் நீதிமன்றத்தாரால் தள்ளுபடி செய்யப்பட்டு விசாரணைக்கு எடுத்துக்கொண்டு விசாரணை அன்று இந்த மனுதாக்கல் செய்யப்பட்டது. மனுதாரரின் அவரது அபிடவிட்டில் பாரா 4,5-ல் கூறும் ஆவணங்களை வழக்கின் போதே தாக்கல் செய்திருக்கலாம். அபிடவிட் 6ம் பாராவில் கூறும் சங்கதிகள் யாவும் பொய், கிரையப் பத்திரத்தில் விற்பனைக்காக காரணங்களை கூறிவிட்டு, அவைகள் போக இதர பணத்தில் வேறு சொத்துக்கள் வாங்குவது என்பது இயல்பு. அபிடவிட் 7-பாரா சங்கதிகளான பாகப்பிரிவினை ஆவணம் இவ்வழக்கு சம்பந்தம் அற்றது. மனுதாரரின் அபிடவிட்டில் பாரா 8-ல் காணும் ஆவணங்கள் தற்போது தான் தேடிப் பார்த்ததில் வீட்டை சுத்தம் செய்யும்போது கிடைத்தது என்பது கற்பனை. மனுதாரர் வழக்கை காலம் தாழ்த்தும் நோக்கத்தோடு இந்த மனுவை தாக்கல் செய்வதாக தெரிகிறது. எனவே எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

5. இம்மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனையில் உள்ள சங்கதி என்னவென்றால், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

6. **<u>பிரச்சனைக்கான தீர்வு:-</u>**

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. மனுதாரர்/வாதி அசல் வழக்கை விளம்புகை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்துள்ளார். வழக்குரையுடன் தாக்கல் செய்யாமல் தற்போது இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை மனுதாரர்/வாதி தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய அனுமதிவேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவை அனுமதிக்கவேண்டும் என்று மனுதாரர் தரப்பில் வாதம் செய்யப்பட்டுள்ளது.

7. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில், இம்மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை வழக்குரையுடன் தாக்கல் செய்யாமல் காலம் கடந்து அசல் வழக்கை காலம் கடத்தவேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பாகப்பிரிவினை ஆவணம் இவ்வழக்கிற்கு சம்மந்தம் இல்லாத ஆவணம் ஆகும். இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்து எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

8. அசல் வழக்கானது விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்து சம்மந்தமாக இருதரப்பினர்களுக்கும் இடையே உள்ள பிரச்சனையை தீர்வு காண்பதற்கு இம்மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் உதவிகரமாக இருக்கும் என்பதால், இம்மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இம்மனுவை அனுமதிப்பதினால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

**முடிவாக,** இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை குறித்து உத்தரவு இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2026ஆம் ஆண்டு மார்ச் மாதம் 03ஆம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

BASKARAN S
Digitally signed by BASKARAN S
Date: 2026.03.03 17:33:20 +0530

சார்பு நீதிபதி,

ஆரணி.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றிவணங்கள்:–</u> இல்லை

BASKARAN S
Digitally signed by BASKARAN S
Date: 2026.03.03 17:33:29 +0530

சார்பு நீதிபதி,

ஆரணி.

IA.No.04/2025 in OS.No.111/2019